செய்தி வெளியீடு எண்:628 நாள்:18.08.2021

செய்தி வெளியீடு

## சிறந்த எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான (ADATA FOUNDATION) நிதியிலிருந்து 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து சிறந்த ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட கிருத்துவர்/பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 20 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாத இருவர் (ஆண்டிற்கு11 எழுத்தாளர்கள்) ஆக மொத்தம் 22 எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்கப்படும். இதற்கான நூல் வெளியிட ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதியுதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள் போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இதுகுறித்த விவரங்களை தமிழக அரசின் **tn.gov.in** என்ற இணைய தளத்தில் (website) அறிந்து கொள்ளலாம். மேலும், அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.

முறையான விண்ணப்பத்துடன் படைப்பினை எழுத்து வடிவில் 2 (இரண்டு) பிரதிகள், விண்ணப்பதாரரின் கைப்பேசி எண்கள் குறிப்பிட்டு அரசுக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் **20. 09..2021.**

ஆதிதிராவிடர் நல ஆணையர்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:–**
ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை–05.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9